1409

இராஜா S. S. ஷண்முகதாஸ் அவர்களியற்றிய

சந்தவசனலங்கார பக்திரஸ

செந்தமிழ்க்கதம்பம்

4-ஆம் பாகம்

15 MAR 1932

காப்பி ரைட்

விலை அணா 2

... கிருஷ்ண பிள்ளை,
... நா. சி. பிரதர்ஸ்., மதுரை.

NR21
N31
179982

உ

குகமயம். மிகநயம்.

தமிழ் நாடகாசிரியச் சக்ரவர்த்தி, ஸ்ரீ ல ஸ்ரீ

T. T. சங்கரதாஸ் சுவாமி,

அவர்களின் மாணவரான

மதுரை செந்தமிழ் வித்துவான்

சந்தச் சரபம் இராஜா

S.S. ஷண்முகதாஸ் அவர்களால்

இயற்றப்பெற்ற

சந்த வசனலங்கார பக்திரஸ

செந்தமிழ்க் கதம்பம்

நான்காம் பாகம்.

1407

15 MAR 1932

மு. கிருஷ்ண பிள்ளை,

பி. நா. சி. பிரதர்ஸ் ஏஜண்டு

புக்செல்லர்ஸ் அண்டு பப்ளிஷர்ஸ்,

மதுரை.

மதுரை விவேகானந்தா பிரஸில்

பதிப்பிக்கப் பெற்றது.

காப்பிரைட்] 1931 [விலை அணா 2

உ

சிவமயம்.

இக்கீதாசிரியர் எழுதிய

அவையடக்க ஆசிரியம்.

சந்தக் களஞ்சியத் தமிழருண கிரியல்ல
தாயவ்வை யல்ல கம்பன்
தானல்ல வர்ப்புதல்வ னம்பிகா பதியல்ல
சாற்றிரட் டயர்க ளல்ல
அந்தமாம் பழகவிதை யல்லதிரு வள்ளுவ
ரல்லபுக ழேந்தி யல்ல
அதிமதுர கவிகாள மேகமொட் டக்கூத்த
ரல்லகவி காளி யல்ல
சிந்துசந் தாரசங் கப்புலவர் கவியல்ல
சித்ரகவி யல்ல வேதோ
தெய்வசிந் தனைகொண்டு கந்தவேள் பக்திரஸ
செந்தமிழ்க் கதம்ப மெனயான்
இந்தவித கவிதையை வந்தவா றெழுதினே
னெக்குற்ற மிதிற் காணினும்
எல்லாம் பொருப்பது வல்லோர்க டங்கடமை
யெனமகிழ்ந் தாழ்வர் மாதோ.

சந்தச் சரபம்
இராஜா S. S. ஷண்முகதாஸ்
தமிழ் நாடகாசிரியன்,
மதுரை.

உ

குகமயம்.

பக்திரஸ செந்தமிழ்க் கதம்பம்.

நான்காம் பாகம்.

விருத்தம்.

சங்கத் தமிழ்தழைத் தோங்குருதி வாலவாய்
தனிலரசு செய்
அங்கயற் கண்ணிமீ னாக்ஷிசொக் கேசனின்
அருளாரவினால்
எங்கும்பிர பல்யமுறு செந்தமிழ்க் கதம்பமென்
றிசைதயோ தமுன்
தங்குமைங்கர வேளெனும் யானைமாமுகத்
தையன்றுணை.

---

1. தேவி மீனாக்ஷி—டான்ஸ் நோட்டு என்ற வர்ணமெட்டு. தாளம்—ஆதி.

பல்லவி சந்தங்கள்.

ஜே ஜே ஜே கண நாதிப
தே ஜே ஜே நமஸ்து
சிந்தனைக்கு முந்திவரும்
தந்திமுகத் தெந்தையர்க்கும் ஜே

சித்திக்கும் புத்திக்கும்
பத்திக்கும் தித்திக்கும் ஜே

செந்தமிழ்ப்பா வலர்சொல்லும்
சிந்துறைசந் தக்கவிக்கும் ஜே

சிற்பர வற்புத கற்பித சொற்புகழ் ஜே
சிந்தாரப்பண் மாலையதாகிய
சந்தாரச்சர பத்தமிழோதிய
சேயன்ஷண்மு கன்கொண்டாடும்
காயனுமி தழுமுறைக்கும் ஜே

---

2. கண்முன் பாரய்யா—என்ற மெட்டு.

இராகம்—கரகரப்பிரியா—தாளம்—ஆதி.

பல்லவி.

கதிநீசதா கண்மணி மீனாக்ஷி க

அநுபல்லவி.

துதிமாமது ரிதஸோபித
பதிமாமது ராபுரிக் கிரீடராணி க

சரணம்.

மதிஞான வாரி மங்களா லங்காரி
இதிகாசம் பாரி லென்றும்போ ற்றும்வீரி

விதியால் வரும் வினையானதை
தகிர்க்கியே ஷண்முகன் சொல்தன்னையாள க

---

3. முருகனே கலியுகத்தினில்—என்ற மெட்டு.

பின் கடின மகுட சந்தம்.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஏகம்.

பல்லவி சந்தம்.

திருநல்லூர்க் குமரனே—ஓம்
ஜெகத் குருபர சிவஷண் முகனே தி
தெய்வம் நீயன்றி வேறில்லை நேரே
திக்கிலா வென்று திக்கருள் கூறே
கைத விரவிட் டால்கதி வேறே
காண வில்லைக் கடைக்கண்ணுற் பாரே தி
தேனபிஷேகக் காரா
செல்லக்கதிர்காமத் தூரா
கானமிர் தவொய் யாரா
கந்தவேளென்னும் பேரா தி
சிந்தைநா னொந்து
வந்தேனென் றுயிரம்
சந்தமாய்ச் சொல்லி
யும்வந்தி டாதேனே தி
சித்தா ரவித்தா ரயித்தா
ரணித்தா யெனத்தாள் துதித்தா

நினைத்தான் மனத்தால் நினைத்தா.
ரெனத்தாள் கொடுத்தாள் சிவத்தாயே

(தொகையரா)

சித்திரக் கலாபமயி லேறிவிளை யாடிவரும்
தெய்வானை வள்ளி மோகா
சிந்துசெந் தமிழமுத சந்தச்சர பக்கவி
சேயன் ஷண் முகன் சொற்பாகா

அநுபல்லவி.

ஒருவருமில்லை பெருமருள் தர
வருமறுமுக குருமுருகனே ॥

---

4. நாதசங்கீதப் பொன்மணிமண்டபம்—என்ற கடைசி

மகுட மெட்டு.

தாளம்—ஆதி.

பல்லவி கண்ணிகள்.

கிரி மலைக்குமர கந்தநாதா—அருண
கிரிக்கு கிளியெனவி சைந்தபோதா
பாரினிலேயுயர்ந்த பக்திவேதா—வசன
பஜனுமிர்தவலங்கித சங்கீதா

பாதநீதா பரப்ரம்
மாதத்வீதா அன்பர்கள்
பந்தியில் முந்திடு
முந்திரு மந்திர
பண்புதாதா ஜீ

ஆருமெனக்குகதி யில்லையையனே—சிந்து
அண்ணுமலைரெட்டிக்கன் பார்ந்தமெய்யனே
கோரும்வரந்தரக்கூ டியகையனே—ஞான
குழந்தைசம்மந்தனுரு கொண்டதுய்யனே
கூறிடவுன்னே வந்திடக்
கோறிடுமுன்னே — என்றுங்
கும்பிடு மும்பர்கள்
நம்பிடு தெம்புயர்
குருமுருகையனே ஜீ

கலிகாலதெய்வமேயே கந்தாகுகா—வுந்தன்
கருணை யெனக்கிரங்கி வந்தாசுகா
பொலிவாகுமென்னுளத்தே பொருந்தும்மகா—கீத
பூமணக்குறத்தி மகிழ் சாமி ஷண்முகா
பொன்மயில்ஜகா கொண்டப்
புநிதபிஞ்ஞகா நற்றவ
புத்திமி குத்துயர்
பத்திம னத்தினர்
போற்றுநல்யுகா ஜீ

சித்திரவித்தாரக்கவி சந்தப்பாட்டு—இன்ப
செந்தமிழ்சந்தச்சரப சிந்தைநாட்டு

முத்திரைஷண்முகன்சொல்லுந் துதிக்கேட்டு -ஞான
முழங்கும்வகையருள தயைக்கூட்டு
முத்தியூட்டு பதத்தின்
சித்திகாட்டு ஜெகம்
முற்றிலும் பற்றுத
லுற்றிடு நற்றுணை
முடிசூட்டு ஞா

---

5. காமசுந்த ராங்கி—என்ற மெட்டு.

இராகம்-தன்யாசி-தாளம்-ரூபகம்.

பல்லவி சந்தம்.

ஞானஷண்முகா குகா
கலியுக வரத ஞா
நம்பினேன் சிவசம்போ
வரகர மகதேவா ஞா

அநுபல்லவி சந்தம்.

நத்தித் துதித்தே னித்தரை
சித்திக் குவித்தாயு தித்தசிவ ஞா

நடின மரக தமயி லிலரை
கொடியி லடியே னிடம் வந்த
ருள் செய் ஞா

நறு— திருவடியி னருளமுதப்
பெரு— பொருளதனை யருளவரு
குரு— வறுமுகனி யொருமையுட
னருளவென திருளகலும்
முருகமலை ஞா

நா னுன தடிமலரைத்
தா னனு தினம்பணிய
நீ மன மிரங்கிடாத
தே னெனக் கதையுரை
செய்வாய் ஞா

சரணம் சந்தம்.

கானரஞ்சிதத் தீனதயாளா
கர்த்தனேவள் ளிமணவாளா
தேனபிஷேகத் தேற்கும்பொற்றாளா
திகழ்ச்சந்தம் புகழ்ச்சரபம்
மகிழ்ச்சுகஷண் முகன்சொற்கருள் ஞா

---

6. இராகம்—கேதாரகௌளம்—அடைதாளம்.

தனன தன தனன தனனம்
தனு—தந்த
தனன தன தனன தனனம்

என்ற சுருள் சந்தமெட்டு.

பல்லவி.

சதுரகிரி மலைதரிசனம்
மகாலிங்கச் ச

நமது — சாக்ஷாத் பரன்வசிப்புக்
காக்ஷேப ளையேயில்லை ச

சகோதர சகோதரிக
ளேயதோ தெரிகிறது ச

சத்தா திகள்சூழ்
சித்தா திகள்வாழ்பெரு
ஜாகை யாகும் மாகுகை யுறு ச

என்றுஞ் — சங்கர சம்போ சதாசி
வாசி வாசி யென துதிக்கும் ச

சென்று— சரண்புகுந் திடத்திரு
வருண்மிகுந் தருள்தரு
சற்குரு தேசிகன் தங்கிடு ச

சங்கப்ர சங்கக்கவிச்
சிங்கநா வலர்கள்தொழ
ஜென்மபிணி களையகற்றி
நன்மையருள் சின்மயச் ச

அநுபல்லவி.

மதுரைமொழி சிந்துகள் சதா
துதிக்குங் கதா
நிதிக்கோ ரிதா
மதிக்கும்பதா—வாவெனத்துதிசெய் ச

சரணம்.

எதையெவர்கட் கருதிடினும்
மதையவர்கட் கருள்புரியும்
இகமிதில் மிககவி
புகலுஷண் முகனுரை ச

---

7. இராகம்-பிலகரி-தாளம்-ரூபகம்.

தந்தத் தன தனன னறு
தானத் தன தனன னறு
என்ற மெட்டு துடர் மகுடம்.

பல்லவி.

குன்றைக்குடி யோய்க்குமரா
கோலமயி லோய்சமரா
என்றைக்குவந் தாளமனம்
எண்ணியுள தோசொற்றினம் கு

அநுபல்லவி.

அன்றுவள்ளி கானவிலே
யானைதன்னை யழைத்துமணம்
என்றுந்துதித் திடப்புரிந்த
எங்கள்வடி வேலவனே கு

இத்தரைபுக ழுத்தமாவுனை
யெத்தருணந்து தித்திடவிலை

யேனுனக் கென்மேல்
தானில்லை மனம்
கானவிசை கொள்
ஞான ஷண்முகா
இறைவனே விறைவினில் வாவா தேவா கு

சரணம்.

கன்றுமானைக் காத்தணிந்த
கடவுள்சு தாமுருகா
அன்றுகறிக் கபயந்தந்த
அரிதிரு மால்மருகா கு
கொக்கறித்து முக்ரமாக
அக்ரமித்து திக்கெனவே
கோரத்தோடுவந்த தீரத்தனுகிய
சூரபத்மனுயிரை வேறறச்செய்திட்டக்
குமாரக் குருபர முருகக் குகனே கு

மயில் தூது விருத்தம்.

எத்தனை யோபக்தி மான்களையுங் காத்தவன்
என்னையுங் காக்கச் சொல்லு
இப்படி வராதிருந் திடிலவன் தன்னுளம்
எங்குமென வோங்கிச் சொல்லு
சித்தந் தளர்ந்துனை நித்திரையி லுந்துதி
செய்குறு னென்று சொல்லு
சீராரும் வள்ளிதெய் வானையொடு வேல்கொண்டு
சிறிதுகண் பார்க்கச் சொல்லு

கர்த்தனு யுலகத்தை யாளுவதி னூற்சீவ
காருண்யம் வைக்கச் சொல்லு
கைகளீ ராறுமுக மாறுமழ கானதால்
காலனை யகற்றச் சொல்லு
இத்தரையி லேதொண்டர் பக்தியைச் சார்ந்தவ
னென்றதை யெடுத்துச் சொல்லு
இச்சையோ டெனைவந்து ரக்ஷிக்க வேண்டிசொல்
பச்சைக்க லாப மயிலே.

9\. ஞானசேகரமான மாமணியே—என்ற மெட்டு.

இராகம்—கமாஸ்—தாளம்—ரூபகம்.

பல்லவி.

பழனிவேலைக்கண் பார்க்கச்சொல் மயிலே

துதி— பாடிமனம் வாடியேனுன்
தேடியதா யோடியேதென் ப

துயர்— பருத்தேனை வருத்துது
பொருத்திடேன் கருத்துயர் ப

இந்த— பதிபுக ழதிபதி யைத்தேடி
துதிபுரி கின்றதைத் தெரியவோடி ப

பெரும்— பாருலகில் வேறுயெனக் காருதுணை
தேருதலைக் கூறுதற்கு சீருறவே ப

சிறு— பஞ்சையா னடிமைத் தஞ்சமென
நெஞ்சிரங் குமுறைகெஞ் சுகிறதால் ப

அநுபல்லவி.

அழகீ கண்ணுற்ற தாயவனிடம்
அன்புற் றறைந் திடவிரைவினி
லென்பத்திக் கேநெறி யருள்செய் ப

சரணம்.

உன்னுமத்தைமற வாதெந்தநேரமும்
வோதுகிருன் தமிழ்க் கீதமெனச்சொல்லு
என்னுளௌண்கண்ணுறப் போகுதெனத்தி
யேக்கமுறுவதை யுமெடுத்துச்சொல்லு
இன்னுளிற்புத்தி யவனுக்கெடுத்து
யியம்புவதாரென்ப தையும்நன்ருய்ச் சொல்லு
இதுதி புகழ் சந்தச் சரபஷண்
முகனுறைப் படியேமகிழ்ந்து நீ சொல் ப

10. வேல்தூது விருத்தம்.

ஏனிந்த சோதனே யெவர்கள்துற் போதனே
யென்றதை யுறத்துக் கேளு
என்மீது கோபமோ யில்லையேல் பாபமோ
யெதனுலி தென்று கேளு,
நானிந்த துன்பத்தி லாழ்வது தர்மமா
ஞாயமா வென்று கேளு
நாடியவ னிடமென்று நீசெல்லு வாயென்று
நன்ருய்த் தடுத்துக் கேளு
மானீன்றக் குறமாது மங்கைதாய் வள்ளிதன்
மையலா வென்று கேளு
மதிதெரிந் ததிநின்று யென்றேனும் பக்தியை
மறந்தானே வென்று கேளு
சீனிகற் கண்டுதேன் பாகென்றவவனது
திருவுள மிறங்கக் கேளு
சிந்தருண கிரிபுகழ் சந்தக்க விக்கருள்
செல்வக் கதிர்காம வேலே.

11. கழுகுமலைக்கோநாம் நேராய்—என்ற மெட்டு.

இராகம்-பைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி சந்தம்.

நீசென்றுவா செந்திவேலே—முருகன்
நேரில்சொல்லத் தோது
வேறில்லைத் தூது நீ

அநுபல்லவி சந்தங்கள்.

அதி— நேசப்பிர யாசத்துட
னேசற்றுவிஸ் வாசத்தொடு நீ
எனை— நினைத்தொரு மனத்துடன்
கனத்தொடித் தினத்தினில் நீ
நித— நிதங்கிருபை பதந்தாதுதி
விதந்தெரிந் திதமுறததி நீ
புள்ளி— நீலமயிலேறுந்தணி காசல
பாலமுருகேசனுக்கி தனைச்சொல நீ
பாரில்— நிந்தைக்கிட மிலாஞான
கந்தன்வா ழெதாஸ்தானம் நீ
ததி— நித்தமு னைத்தொழு பத்தனென்
றித்தின மெத்தவு ரைத்திட நீ

சரணசந்தம்.

மாசென்ற பாசவ லையாலே வாடி
மயங்கித் தயங்கி தவிப்பதி ஞலோடி
தாஸர்பு கழ்பைர விராகம் பாடி
சாற்றும்போ ரூர்முருகன் சன்னதி தேடி
சங்கதி யொன்றும்விடாது
ஷண்முக னுரைவழுவாது
அங்கிதைப் பகர்ந்திடத்தோது
அதிவிரை வாகயிப்போது நீ

12. இன்னும் மனம் வல்லையா—என்ற மெட்டு.

இராகம்-பைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வடி— வேலனுக் கிதையுறைமயிலே—நான்
வேண்டிக்கொண் டதாய்பழனி
யாண்டிப்பண் டாரக்குறவடி வே

அநுபல்லவி.

அருள்— விற்பன கற்பித சொற்புக
ழற்புத பொற்புறு நற்பத வே
துணை— வேறினி யாரெனக் கூறினில்
கோறிய காரியம் நேரிட வே
என்— விரதம்மிதைச் சரதம்மென
பிரதத்தொடு வாதமுருக வே
ஞான— விறிவுறு மிருவறு கரவரு
ணெறிதரு குருபர வறுமுக வே
சொன்ன— விபாத்தை மறந்துவி டாமலதி
கவனத்து டனேயெட்டுக் குடியதிபதி வே

சரணம்.

ஞாலத்தில் நான்படுந் துன்பத்தைப் பாராது
நாளுமவ னிருக் கின்றதா விப்போது
மாலதைக் கொண்டஞ்சி டாதுப்பு விமீது
மடியைப்பி டித்திழுப் பேன்சொல்த ப்பாது
மகிழ்பெற விதுததி பண்டமிழ்
புகழ்பெறு சந்தச்சர பச்சண்
முகஜுனா யிதற்கிணங் கிமெஞ்ஞான
சுகந்தா பெறுமன துடன்கதிர் வே

நான்காம் பாகம் முற்றுப் பெற்றது.

புதிதாக வெளிவந்திருக்கும் பக்திரஸக்கீதங்கள்

ஸ்ரீமான் மாம்பழக்கவிச்சிங்க நாவலரவர்கள் சகோதரர் குமாரர் மகா-ா-ா-ஸ்ரீ M. R. S. வேல்ச்சாமிக்கவிராயர் அவர்கள்இயற்றியதண்ட பாணித் தெய்வ ரஞ்சிதமெனும் பக்திரசக்கீர்த்தனம் முதற்பாகம் .... 0—5—0

ஷை இரண்டாம் பாகம் ... 0—5—0

செட்டிநகர் வித்வான் இராமசாமிக்கவிராயர் அவர்களியற்றிய பக்திரசக்கீதாமிர்தம் 0—4—0

நாடகாசிரிய சக்ரவர்த்தி ஸ்ரீலஸ்ரீ T. T. சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றிய ஒன்பது நாடகச் சரித்திரங்கள் சேர்ந்த ஒரு புஸ்தகம் 3—0—0

சோழவந்தான் ஸ்ரீமான் அரச சண்முகனுர் மருகர் சோமசுந்தரம் பிள்ளை என்ற கவிக் குஞ்சர பாஷியம் அவர்கள் இயற்றிய பக்திரசக் கீர்த்தனம் .... 0—4—0

மதுரை, சபாரஞ்சித R. V. சத்திவேலாச்சாரி அவர்கள் இயற்றிய குமரக்கடவுள் பஜனுமிர்தம் புதிதாக வெளிவந்தது .... 0—5—0

ஷையாரியற்றிய வேணுகானம் என்ற நூதன பக்திரசக்கீர்த்தனம் .... 0—5—0

உத்தமபாளையம் டிராமா உபாத்தியாயர் U. P. காமாட்சியாபிள்ளை அவர்கள் இயற்றிய விநோதபரமானந்தக் கீர்த்தனம் ... 0—5—0

ஷை யாரியற்றிய இந்து தேசாபிமானிகள் இனிய ரமணியகீதம் .... 0—5—0

☞ மு. கிருஷ்ண பிள்ளை,

பி. நா. சி. பிரதர்ஸ் ஏஜண்டு,

புக்ஷாப், மதுரை.

விவேகானந்தா பிரஸ், மதுரை-31.